பரீட்சை நடைமுறை

- இங்கு செவிமடுத்தல், வாசிப்பு, எழுத்து மற்றும் பேச்சு ஆகிய 4 கூறுகளும் பரீட்சிக்கப்படும்.

| கூறுகள் | காலம் | வினாப்பத்திர அமைப்பு | புள்ளிகள் | சித்தியடைவதற்கு ஒவ்வொரு பகுதிக்கும் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| செவிமடுத்தல் | 01 மணித்தியாலம் | 4 பகுதிகள். 40 வினாக்கள் | 100 | 40 |
| வாசிப்பு | 01 மணித்தியாலம் | 3 பகுதிகள். 40 வினாக்கள் | 100 | 40 |
| எழுத்து | 01 மணித்தியாலம் | 2 பகுதிகள். 02 வினாக்கள் | 100 | 40 |
| பேச்சு | 30 நிமிடங்கள் | 4 பகுதிகள் | 100 | 40 |

- ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளக் கூடிய புள்ளிகளைப் பெற வேண்டுமாயின் பரீட்சித்தலுக்கு உள்ளாக்கப்படும் செவிமடுத்தல், வாசிப்பு, எழுத்து மற்றும் பேச்சு ஆகிய 4 கூறுகளிலும் பின்வரும் திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

| புள்ளிகளின் வீச்சு | | உத்தேசத் திறன் |
|---|---|---|
| 100 - 80 | சகல கூறுகள் தொடர்பாக பரந்த | செவிமடுத்தல் - எளிய வடிவிலான மற்றும் அத்தியாவசியமான விரிவுரைகள் அல்லது கலந்துரையாடல்களை செவிமடுத்து நன்கு கிரகிக்கும் |

| | | |
|---|---|---|
| | அறிவினைக் கொண்டிருத்தல் | ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>வாசிப்பு – ஆழமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்கள், சட்ட விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்கள் போன்றவற்றை வாசித்து நன்கு கிரகிக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>எழுத்து – நீண்ட ஆக்கங்கள், கட்டுரைகள், விளக்கமான மற்றும் பகுப்பாய்வு சார்ந்த ஆவணங்கள் போன்றவற்றை சிறப்பாக எழுதும் ஆற்றல் இருத்தல் வேண்டும். அவற்றை எழுத்து மொழியில் இலக்கண முறைப்படி எழுதல் வேண்டும்.<br><br>பேச்சு – சாதாரண உரையாடலைப் போன்றே, கல்விசார் உரைகளிலும் விடயங்களைத் தெரிவிக்கவும், விரிவுரைகள் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உடனடி உரையை நிகழ்த்துவதற்கும் சிறந்த ஆற்றல் இருத்தல் வேண்டும். |
| 79 - 65 | சகல கூறுகள் தொடர்பாகப் பரந்த அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும். | செவிமடுத்தல் - எளிய வடிவிலான உரையாடல்கள், அத்தியாவசியமான விரிவுரைகள் அல்லது கலந்துரையாடல்கள் போன்றவற்றை செவிமடுத்து கிரகிக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>வாசிப்பு – ஆழமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்கள், சட்ட விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்கள் போன்றவற்றை வாசிக்கும் திறன் மற்றும் கிரகிக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>எழுத்து - நீண்ட ஆக்கங்கள், கட்டுரைகள், விளக்கமான மற்றும் பகுப்பாய்வு சார்பான ஆவணங்கள் போன்றவற்றை சிறப்பாக எழுதும் ஆற்றல் இருத்தல் வேண்டும். அவற்றை எழுத்து மொழியில் இலக்கண முறைப்படி எழுதல் வேண்டும்.<br><br>பேச்சு – சாதாரண உரையாடலைப் போன்றே, கல்விசார் உரைகளில் விடயங்களைத் தெரிவிக்கவும், விரிவுரைகள் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உடனடி உரையை நிகழ்த்துவதற்கும் சிறந்த ஆற்றல் இருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 64 - 50 | சகல கூறுகள் தொடர்பாகப் பரந்த அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும். | செவிமடுத்தல் - எளிய வடிவிலான உரையாடல்கள், விரிவுரைகள் அல்லது கலந்துரையாடல்கள் போன்றவற்றை செவிமடுத்து கிரகிக்கும் ஆற்றல் சாதாரண மட்டத்தில் இருத்தல் வேண்டும்.<br><br>வாசிப்பு – ஆழமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்கள், சட்ட விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்கள் போன்றவற்றை வாசிக்கும் திறன் மற்றும் ஓரளவு கிரகிக்கும் ஆற்றலும், எளிய வடிவிலான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களை நன்கு கிரகிக்கும் ஆற்றலும் இருத்தல் வேண்டும்.<br><br>எழுத்து - ஆக்கங்கள், கட்டுரைகள், விளக்கமான மற்றும் பகுப்பாய்வு ஆவணங்கள் போன்றவற்றை எழுதும் ஆற்றல் சாதாரண மட்டத்தில் இருத்தல் வேண்டும். அவற்றை எழுத்து மொழியில் இலக்கண முறைப்படி எழுதல் வேண்டும்.<br><br>பேச்சு – சாதாரண உரையாடலின் போது சிறந்த முறையிலும், கல்விசார் உரைகளின் போது ஓரளவும் விடயங்களைத் தெரிவிக்கவும், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உரை நிகழ்த்துவதற்கும் சாதாரண மட்டத்தில் ஆற்றல் இருத்தல் வேண்டும். |